தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீட்டு எண்: 27/2026 **நாள்: 27.02.2026**

செய்திக் குறிப்பு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்:11/2025, நாள் 15.07.2025-ன் வாயிலாக நேரடி நியமனத்திற்கு அறிவிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளில் (தொகுதி II மற்றும் IIA பணிகள்) அடங்கியுள்ள பதவிகளுக்கான முதல்நிலைத் தேர்வு 28.09.2025மு.ப. தேதியில் நடைபெற்றது. தொகுதி-II A -க்கான முதன்மை தேர்வு 15.03.2026 மு.ப மற்றும் தொகுதி II மற்றும் IIAக்கான தமிழ் தகுதி தேர்வு 1503.2026 பி.ப நடைபெற உள்ளது.

மாண்புமிகு உயர்நீதிமன்ற 25.02.2026 நாளிட்ட ஆணையின் படி (W.P.No.7426 of 2026) முதன்மை தேர்வு கட்டணம் செலுத்தாத சில தேர்வர்களுக்கு மறுவாய்ப்பு 05.03.2026 11.59 இரவு வரை வழங்கப்படுகிறது. இது குறித்து தனிப்பட்ட முறையில் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அவர்களது OTR மூலமாக தேர்வு கட்டணம் மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.

ப. ஸ்ரீ. வெங்கட பிரியா , இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்